1981 பிப்ரவரி 6]

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, இடைப்பாடித் தொகுதியிலுள்ள போடிநாயக்கன்பட்டி கிராமத்தில் வாழும் ஆதி திராவிட மக்களுக்காக மட்டும் இந்த மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற இனத்தினர் வாழும் பகுதிகளுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, போடிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு 32,300 ரூபாய் செலவில் 29 எண்ணிக்கை கொண்ட 40 வாட்ஸ் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் எனக்கு வந்திருக்கின்றது. ஊரின் மற்றப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு மின் வசதி வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுபற்றி மின்சார வாரியத்திற்கு உத்தரவு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, ஊரார் வாழ்கின்ற பகுதி என்கிறார். அப்படி என்றால் இந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குரிய பெயர் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைத்தான் சொன்னேன். ஆகவே எல்லாமே ஊர்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, இந்த நிலைமையை மாற்ற சேலம் மாவட்டத்தில் ஒரு மின் விநியோக அமைப்பு ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நீரிலிருந்து மின் உற்பத்தி.

*வினா எண் 203—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காவிரிக்கரையில் ஒகனேக்கல்லிலிருந்து மேட்டூர் வரை புதிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் சாத்தியங்கள் உண்டா ?

(ஆ) ஆம் எனில் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, காவிரிக் கரையில் ஒகனேக்கல்லிலிருந்து மேட்டூர் வரை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்கு சாத்தியங்கள் உண்டா என்பதை அறிய ஆய்வுகள் ஏதேனும் அரசு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒகனேக்கல்லிலிருந்து மேட்டூர் வரை நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் சாத்தியங்கள் உண்டா என்பது கேள்வி. மேட்டூரிலே நீர் தேங்கினால் ஒகனேக்கல் வரை நீர் பிடிப்பு இருக்கும். ஆகவே இடையிலே மின் உற்பத்தி நிலையம் அமைக்க முடியாது என்பதுதான் பதில்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, ஒகனேக்கல் மின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி தருவதில் கால தாமதம் செய்வதால் அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள் வதற்கு இந்த அரசு உறுதியான முயற்சியை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு காலதாமதம் செய்யவில்லை. கர்நாடக அரசு தன்னுடைய சம்மதத்தை இன்னும் தெரிவிக்கவில்லை.

மாபுண்மிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]